முழுவதும் இருக்கின்ற 22 மாநிலங்களில் 6 மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் மேலவையெல்லாம் எடுக்கப்பட்டுவிட்டன. ஆனால் நம்முடைய மாநிலத்தில் அடிக்கடி வந்துபோனது உண்டு. இப்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு திட்டவட்டமாக எடுக்கப்படவில்லை. திட்டவட்டமாக எடுக்கப்படுகிற நிலையில் இந்த அவைக்குக் கொண்டு வரப்படாமல் எந்த முடிவும் எடுக்க முடியாது. அவையினுடைய கருத்தை அறிந்து, அவையினுடைய முடிவுக்குப் பிறகுதான் அது எடுக்கப்படும். அப்படி அவையினுடைய கருத்து வந்து, செயற்குறிப்பு போடப்பட்டு, அவைக்கு கொண்டுவருகின்றபோது, அவையில் கருத்தை தெரிவிக்கவோ, அப்போது அதற்கான காரண காரியங்களை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பும் ஏற்படும். இப்போது திட்டவட்டமான செயற்குறிப்பு, இன்றைய நிலையில் இந்த நேரத்தில் இல்லை என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(ஈ) பிற்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீடு குறித்து

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய வாழ்நாள் முழுவதும் பிற்பட்டோர் நலனுக்காக பாடுபட்டவர் தந்தை பெரியார் அவர்கள். அவர்களுடைய கொள்கையின்படி கல்வி, வேலைவாய்ப்பு, பல்வேறு துறைகளில் இருகின்ற முன்னேற்றங்கள் இவைகளைப் பங்கிட்டுத் தரவேண்டும் என்பது பெரியார் அவர்களுடைய கொள்கை ஆகும். அதேபோல் தமிழகத்தில் இருக்கின்ற 5 கோடி மக்களில் 2 கோடி மக்கள் அடங்கிய வன்னிய சமுதாயத்தினர் கடந்த 6ஆம் தேதி அன்று தமிழகத்தில் இந்த நிலையை வலியுறுத்தி தலையை எண்ணுகிற முறையில் எங்களுக்கும் கல்வி, தொழில், வேலை வாய்ப்பில்.............................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. இதை டிபேட்டில் பேசலாம். (குறுக்கீடு).

(உ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்துள்ள குறுகிய கால வினா......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முடிந்து போன விவகாரம். அதை விடுங்கள். சில நேரங்களிலே உங்களுக்கு விதியை மீறி செய்திருக்கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொல்லும்போது நான் விதியை மீறி செய்து இருக்கிறேன் என்று சொன்னீர்கள்...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில நேரங்களில் விதியை மீறி கொடுத்தேன் என்று தான் சொன்னேன். உங்களுக்காகத் தான் செய்தேன். எனக்காக எதையும் நான் செய்வது இல்லை. உறுப்பினர்களைத் திருப்தி செய்வதற்காகத் தான் செய்தேன். It is a passing remark. It was not uttered seriously.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது ஒழுங்குப் பிரச்சினையில் வராது. இன்றைக்கு நிதி ஒதுக்கீடு மசோதா வருகிறது. அதில் பேசுகிற போது யாரேனும் ஒருவர் இந்தக் கருத்தை எடுத்துப் பேசலாம். அதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி வாய்ப்பு இருக்கும்போது, இதை பாயின்ட் ஆப் ஆர்டரில் பேச வேண்டிய அவசியம் இல்லை.

(ஊ) மாநிலங்கள் அவையில் நடந்த விவாதம் குறித்து

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்திய மாநில அவையில் இந்திய துணைக் கண்டம் எதிர்பாராத அளவுக்கு ஜனநாயகத்திற்கு ஒரு மாசு கற்பிக்கும் வகையில், ஜனநாயகத்தைக் கொச்சைப் படுத்தும் வகையில் ஒரு நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. நீதித் துறையின் சுதந்திரத்தை அழிக்கவும், அச்சுறுத்தவும் திமிர் பிடித்த சிலர் அக்கிரமச் செயலை ஆரம்பித்து விட்டார்கள் என்றும், ஏப்ரல் 7ஆம் தேதி அன்று தமிழ்நாடு சட்ட மன்றத்தில் சபாநாயகர் தீர்ப்பு நீதித் துறையின் சுதந்திரத்தைப் சாகடிப்பது போல் இருக்கிறது என்றும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டெல்லியில் மேல் சபையில் அவர்கள் அதை பேசினார்கள் என்றால் அதை நாம் இங்கே விவாதிக்க வேண்டியது இல்லை. (குறுக்கீடு) வெளியே யாரும் பேசலாம். நீங்கள் 234 மாண்புமிகு உறுப்பினர்கள் என் மேல் நம்பிக்கை, கான்பிடென்ஸ் வைத்து இருக்கும்போது அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். I have your full confidence love and affection அது போதும், அதுதான் முக்கியம். நீங்கள் இருக்கும்போது யாரும் வேண்டாம்.

(முற்பகல் 10-20)

(எ) திருச்சி நகரில் நிலவும் பதட்ட நிலை.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக திருச்சி மாநகரத்திலே பரபரப்பூட்டுவதாகவும், அச்சுறுத்துகின்ற நிலையிலும், இன்றைய தினம் திருச்சியிலே இருக்கின்ற மக்கள் எல்லாம், கிட்டதட்ட 160-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயந்து, ஒளிந்து, வெளியே இருக்கின்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு). . . .